1978 மார்ச் 28]

திரு. மு. அம்பிகாபதி : பஞ்சாயத்து தலைவர் அல்ல என்ருலும், அங்கே இருக்கிற தப்சு அடிக்கிற கூட்டத்தின் தலைவர் என்று சொல்லுகிருர்கள். என்னிடம் விவரம் இருக்கிறது. அங்கே நானே நேரடியாக போயிருந்தேன். அங்கே கொட்டகைக் கட்டிக் கொடுத்து வசூலித்து தானே எடுத்துக் கொள்கிருர்கள் என்றெல்லாம் சொல்கிருர்கள். நானே அந்த ஊருக்குப் போயிருந்தேன். அமைச்சருக்கு ஏதோ தவருன தகவலைக் கொடுத்திருக்கிருர்கள். இதை மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பஞ்சாயத்துத் தலைவர் என்ற பெயரிலே ஒருவர்தான் இருக்க முடியும். இவர் தலைவர் அல்ல. ஆனுல் தவறுகள் ஏதோ நடப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறுவார்களாஞல் விசாரிக்க ஆட்சேபனை இல்லை.

விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சி.

*691 வினு—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள மதுராகோட்ஸ் மில் பகுதியையும் அதை ஒட்டியுள்ள பகுதியையும் விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியுடன் சேர்க்குமாறு பேரூராட்சியும் சர்வகட்சியினரும் அரசிடம் கோரிக்கை சமர்ப்பித்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அக்கோரிக்கை மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ): விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சி மன்ற தலைவர், உப தலைவர், உறுப்பினர் மற்றும் பொது மக்கள் ஆகியோரிடமிருந்து வந்த கோரிக்கை அரசின் ஆய்வில் இன்னும் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : துணைத் தலைவர் அவர்களே, இந்த விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியை ஒட்டித்தான் மதுரா கோட்ஸ் இருக்கிறது என்று அரசுக்குத் தெரியுமா ? அப்படி இருந்தும் கூட 10 கிலோ மீட்டர் தள்ளி உள்ள மணிமுத்தாறு டவுன்ஷிப்போடு சேர்த்திருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதை அனுதாபத்துடன் கவனித்து விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியோடு இணைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நகரியம் என்று ஒன்று அமைப்பதற்கே தொழிலாளர் குடியிருப்புக்கள் இருந்தால்தான் அமைக்க முடியும். ஆக மணிமுத்தாறு

நகரியம் அமைத்ததன் நோக்கமே இந்த மணிமுத்தாறுதான். உறுப்பினர் எடுத்துச் சொன்ன கருத்தும் அரசினுடைய ஆய்வில் இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் செயற் குறிப்பும், அதற்கான வரைபடமும் கேட்டிருக்கிறோம். அது வந்த பிறகு சீர்தூக்கிப் பார்த்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பீடித் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி

*692 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புகையிலை மீது வசூலிக்கும் வரிப்பணத்திலிருந்து வியாதியால் பாதிக்கும் பீடி தொழிலாளர்களுக்கு உதவி செய்வதென்ற முடிவு எந்த நிலையிலுள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் மருத்துவமனைகளை திறக்குமாறும் கீழ்க்கண்ட மருத்துவ திட்டங்களை அமுல்படுத்துமாறும் சம்பந்தப்பட்ட இந்திய அரசு அலுவலர்களை தமிழக அரசு கேட்டுக்கொண்டுள்ளது:

(1) மேலப்பாளையம், முக்கூடல் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் மருந்தகங்களை அமைத்தல்.

(2) வட ஆற்காட்டில் பெண்ணத்தூரில் உள்ள டி.பி. ஸானடோரியத்தில் பீடி தொழிலாளர்களுக்கு படுக்கைகள் ஒதுக்குதல்.

(3) இராணிப்பேட்டை, ஆற்காடு, வாணியம்பாடி மற்றும் குடியாத்தம் போன்ற இடங்களுக்குச் சேர்த்து நடமாடும் மருந்தகங்களை ஏற்படுத்துதல்.

[முற்பகல் 9.40]

திரு. வி. கே. கோதண்டராமன்: ஐயா, நமது மாநிலத்திலே இதுவரையில் எவ்வளவு பணம் வசூலாகி உள்ளது? நமது மாநிலத்திலே வசூலாகக்கூடிய அந்தப் பணம் பரவலாக இந்த மாநிலத்திற்கே உபயோகப்படுத்தப்படுகிறதா, அல்லது அகில இந்திய ரீதியில் வசூலிக்கும் பணத்தை ஒன்று சேர்த்து பொதுவாக அதைச் செலவிடக்கூடிய சூழ்நிலை இருக்கிறதா? அதற்கான ஏற்பாடுகள் என்ன?